உள்ளத்தின் உண்மைத் தோழன்

# சிநேகிதன்

மாத இதழ்

Volume I Issue I April 2016 Tamil Monthly

'இராயனுடையது இராயனுக்கு
தேவனுடையது தேவனுக்கு'



தனிப்பிரதி ரூ. 10-
ஆண்டு சந்தா ரூ. 100-

மாத இதழ்

# சிநேகிதன்

உள்ளத்தின் உண்மைத் தோழன்

## "சிநேகிதன்"

### மாத இதழ் ஓர் அறிமுகம்

இயேசுவை அறியாதோர் அவரை அறிந்துகொள்ளவும், அகிலமெங்கும் சுவிசேஷமாய் விரைவில் அவர் சொல்லப்படவும், மண்ணில் வாழும் மனிதரெல்லாம் ஒருமுறையேனும் அவரைக் கேள்விப்படவும் இயேசுவை கண்டுகொண்டோர் வேகமாய் தொண்டு செய்ய ஊக்கமளித்து, **அடித்தளம், அர்ப்பணிப்பு** மற்றும் **அழைப்பு** இம்மூன்றையும் அசையாத காரணிகளாக்கி, ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஆத்தும சிநேகிதனாகவும், வாலிபர்களது வாழ்க்கைப் பயணத்தின் வழிகாட்டியாகவும் மாதம் ஒருமுறை வடிவமைக்கப்படும் ஓர் சபை பாகுபாடற்ற மாத இதழ்.

7/273, Mettu Street,
Senthiambalam,
Sawyerpuram P.O,
Thoothukudi Dist., - 628251
TamilNadu, South India

sinagithanoffice@gmail.com
www.youthline.in

Mobile: +919994303363
+919789366176
+919626149855
Phone : 0461- 2361333

# ஆசிரியர் வரிகள்

**கிறிஸ்துவில் பிரியமானோரே,**

பரிசுத்தத்திற்கென்றும் பரலோகத்திற்கென்றும் நம்மை அழைத்து முன்குறித்திருக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். கடந்து வரும் பாதைகளிலும், விதவிதமான சூழ்நிலைகளிலும் நம்மை நடத்தி, **தானொருவரே நமக்குத் தந்தை** என்பதை எவ்வேளையிலும் நமக்குப் புரியவைக்கிறவர் நமது கர்த்தர். கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறதுபோல, **கர்த்தர் ஒருவரே** அவனை வழிநடத்தினார்; அந்நிய தேவன் **அவரோடே இருந்ததில்லை** (உபா 32:12) என்று இஸ்ரவேல் மக்களைக் குறித்து எழுதப்பட்டதைப் போல, நம்மையும் **அவர் ஒருவரே** நடத்திவருகிறார். அந்நிய தேவர்கள் நம்முடைய வாழ்க்கையில் கிரியை செய்ய அவர் ஒருநாளும் ஒருபோதும் அனுமதி அளிப்பதில்லை.

இந்நாள் வரை, இந்நிலை வரை நம்மை நடத்திக்கொண்டுவந்ததற்கான முழு பொறுப்பினையும் **தான் ஒருவரே** ஏற்றுக்கொள்ளுகிறார் என்பதை அறியுங்கால் எத்தனை ஆனந்தம். அவரறிவின்றி நம்முடைய வாழ்க்கையில் ஒன்றும் அசைந்திருக்காது. என்றபோதிலும், "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை வழியிலே நடத்திக்கொண்டுபோகுங்காலத்தில், **நீ அவரை விட்டுப்போகிறதினால் அல்லவோ இதை உனக்கு நேரிடப்பண்ணினாய்?** (எரே 2:17) என்று தடம் புரண்டுச் செல்வதால் உண்டாகும் தீங்கையும் நமக்குக் காட்டிக்கொடுக்கின்றாரே. அவரை விட்டு வலது இடது புறம் விலகினதினாலேயே வாழ்க்கையில் வலிகளைக் கூட்டிக்கொள்ளுகிறோம். "வழி இதுவே, இதிலே நடவுங்கள்" (ஏசாயா 30:21) என்று காதில் விழும் சத்தத்தை கவனமாகக் கேட்டு அவரைப் பின்தொடருவோம்.

இறையாசி உங்களில் பெருகுவதாக!

**"சிநேகிதன்" பத்திரிக்கையினை தாங்கள் வாசிப்பதோடு, பிறரையும் வாசிக்கச் செய்யுங்கள், குறைந்த எண்ணிக்கையிலேயே பத்திரிக்கை அச்சடிக்கப்படுவதால், தாங்கள் வாசித்து முடித்ததும் வேறொருவருக்கு இதனைக் கொடுப்பது எங்களுக்கு நீங்கள் செய்யும் உதவியாயிருக்கும்.**

கிருபை உடனிருப்பதாக!

ஆசிரியர்





# வஞ்சித்தால் மிஞ்சாது

வஞ்சகமான எண்ணங்கள் நம்மை கர்த்தரை விட்டு விலக்கிவிடுகின்றன. படைத்தவரை விட்டு நாம் பிரிந்து நிற்பதற்கும், கிறிஸ்துவின் நற்கந்தமாய் மணம் வீசாமல் நம் மனம் அவரை மறுதலிப்பதற்கும் காரணம், மறுபுறத்தில் நம்மில் குடியிருக்கும் வஞ்சகமே. வாழ்க்கையின் ஒருபுறத்தை மாத்திரம் அவருக்குக் காட்டிவிட்டு, மறுபுறத்தையோ மறைத்து வைத்துக்கொள்ளலாம் என்பது கூடாத காரியம். தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது (மத். 6:3) என்று போதித்தார் இயேசு. எனினும், நம் இரண்டு கைகளும் செய்கிறவைகளின் அறிவு ஆண்டவருக்கு உண்டு என்பது மீண்டும் நினைவுகூறப்படவேண்டியது. “உன் வலது கண் உனக்கு இடறல் உண்டாக்கினால்” என்றும் “உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால்” (மத். 5:29,30) என்றும் அங்கங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே காத்துக்கொள் என்றும் ஆண்டவர் கூறுவதின் அர்த்தம், அவைகள் அனைத்தும் தன் பார்வையின் கீழ் இருக்கிறது, அங்கங்களில் ஒன்று வஞ்சிக்கப்பட்டால்கூட முழு சரீரமும் பாதாளத்தில் சங்கமமாகிவிடும் என்ற அறிவு நம்மை விட்டு நீங்காமலிருக்கவே. நாவு வஞ்சிக்கப்பட்டால், முழு சரீரமும் நஞ்சாகிவிடுமல்லவா. “நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயிருக்கிறது” (யாக். 3:6) என்று யாக்கோபு எழுதிவைத்துள்ளாரே. இச்சையான கண் சரீரத்தை விபச்சாரத்திற்குள் தள்ளிவிடுகின்றதே (மத். 5:28). பிரியமானவர்களே, ஒன்றை தவறவிட்டால்கூட நமக்கு ஒன்றும் மிஞ்சாது என்பதை உணர்ந்தவர்களாக எச்சரிக்கையுடன் வாழ்ந்து எதிரியை வீழ்த்த நாம் அழைக்கப்பட்டவர்கள். பூரணமாய் அவரைத் தொழுதுகொள்ளும் மக்களைப் போல

புறஜாதிகளுக்கும் மற்றும் சகோதரர்களுக்கும் முன்பாக நமது வெளி வாழ்க்கை காணப்பட்டாலும், சாத்தான் **புகார் சொல்லுவதற்கேதுவான காரியங்கள் பல இன்னும் நமக்குள் புதைந்துகிடக்கின்றன**.

## வலது புறத்திலே விரோதி

பிரதான ஆசாரியனாகிய யோசுவா அழுக்கு வஸ்திரம் தரித்தவனாக கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தபோது, அவனுக்கு விரோதஞ் செய்ய சாத்தானும் வலது பக்கத்திலே நின்றுகொண்டிருந்தான் (சகரியா 3:1-3). இதைக் கண்ட கர்த்தர், தமக்கு முன்பாக நிற்கிறவர்களை நோக்கி: இவன்மேல் இருக்கிற **அழுக்கு வஸ்திரங்களைக் களைந்துபோடுங்கள்** என்று ஆணையிட்டதுடன், பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச்செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் (சகரியா 3:4) என்றார். நம்முடைய **அழுக்கு வஸ்திரம், நாம் போகும் இடமெல்லாம் சத்துருவையும் கூட இழுத்துக்கொண்டே வந்துவிடுகின்றது**. "பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்" (ஆதி4:7); "பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்" (எண். 32:23) என்பதுதானே வேதம் கூறும் எச்சரிப்பு. பிரதான ஆசாரியன் என்ற உயர்ந்த பதவியில் யோசுவா காணப்பட்டபோதிலும், பகையாளியாகிய சாத்தானோ பக்கத்தில் அல்லவோ நின்றுகொண்டிருக்கிறான். சாத்தான் அருகே வந்து நின்றதற்கு பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் அக்கிரமங்கள்தானே பிரதானமான காரணம். பிரியமானவர்களே! பதவியினை விரும்புவோரும் மற்றும் தலைமைப் பொறுப்பிலிருப்போரும் இத்தகைய பரிதாபமான நிலையில் காணப்படக்கூடாது. "எங்கள் பிதாக்களின் நாட்கள்முதல் இந்நாள்மட்டும் நாங்கள் பெரிய குற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறோம்; **எங்கள் அக்கிரமங்களினிமித்தம்** நாங்களும், எங்கள் ராஜாக்களும், **எங்கள் ஆசாரியர்களும்,** இந்நாளிலிருக்கிறதுபோல, அந்நியதேச ராஜாக்களின் கையிலே, பட்டயத்துக்கும், சிறையிருப்புக்கும், கொள்ளைக்கும், வெட்கத்துக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டோம் (எஸ்றா 9:7) என்ற எஸ்றாவின் ஜெபமும் ஆசாரியர்களின் அக்கிரமத்தைச் சுட்டிக்காட்டுகின்றதல்லவா. எரேமியாவும், **"ஆசாரியர்களின் அக்கிரமங்களினால் இப்படி வந்தது"** (புல. 4:13) என்று எழுதுகிறாரே. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாய் இந்த உலகத்தில் வாழுவோரே, பரலோகத்தின் உள்ளே செல்வதற்கு எல்லோருக்கும் ஒரே சட்டம்தான் இதில் சந்தேகமில்லை.

**தகப்பன் இருந்தும், பன்றிகள் வரை சென்று வந்தவன் இளையகுமாரன்**. அவனது வாழ்க்கை கறைபட்டது, வஸ்திரம் அழுக்கானது. அவன் திரும்பி வந்தபோது, அவனது நிலையைக் கண்ட தகப்பன், "தன் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள்" (லூக். 15:22) என்று சொன்னாரே. தகப்பனிடம் வந்து சேர்ந்துவிட்டபோதிலும், தகுதியான வஸ்திரமில்லை. முதலில் கழற்றப்பட்டது அவனது அழுக்கு வஸ்திரமே. பதவி முக்கியமல்ல, பக்கத்தில் நிற்பது

யார்? என்பது முக்கியம். விரோதஞ் செய்கிறவன் சபை போதகர்களுக்கோ, தலைவர்களுக்கோ, மூப்பர்களுக்கோ, கமிட்டி உறுப்பினர்களுக்கோ அருகில் நின்றுகொண்டிருப்பானென்றால், அவர்கள் சபைக்கோ அல்லது ஊழியத்திற்கோ ஆபத்தை வருவிக்கக்கூடியவர்கள். அழுக்கு வஸ்திரம் தரித்திருக்கிற போதகர்களாகவோ, ஊழியர்களாகவோ, தலைவர்களாகவோ, விசுவாசிகளாகவோ நாம் காணப்பட்டுவிடாதபடி கவனமாயிருப்போம்; இது முதற்பாடம். கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; **அவர் என் வலது பரிசத்தில் இருக்கிறபடியால்** நான் அசைக்கப்படுவதில்லை (சங். 16:8) என்று உறுதிபடக் கூறும் தாவீதைப் போல, "என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர்" (சங். 73:23) என்று பாடும் ஆசாபைப் போல நமது வாழ்க்கையிலும் நிச்சயத்துடன் வாழுவோம். ஆட்டுக்குட்டியானவரின் **கலியாணத்து முன்பே வஸ்திரத்தை மாற்றிக்கொள்ளுவோம்,** இல்லையேல், "சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய்?" (மத். 22:12) என்று கலியாணத்தன்று கைதுபண்ணப்படுவோம்.

## விட்டுவிட மறுக்கும் வியாதி

இரண்டாவதாக, கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டால் பரலோகம் உறுதி என்பது மெய்யாயினும், அந்த மெய்யைப் பெற்றுக்கொள்ள பொய்யான இந்த உலகத்தில் கிடைத்திருக்கும் அல்லது கிடைக்கவிருக்கும் காரியங்களை இழப்பாகவும் ஈடாகவும் விட்டுவிட பல நேரங்களில் நமது மனம் இணங்குவதில்லை. ஆண்டவருக்கு அருகில் செல்லும்போது, **வியாதிகள், துக்கங்கள், பிசாசின் போராட்டங்கள் மற்றும் பிரச்சனைகள் ஆகியன மட்டுமே நம்மை விட்டுப் போகும்; ஆனால், ஆசீர்வாதங்களோ நம்மை விட்டுப் போகாமல் நாளுக்கு நாள் கூடிக்கொண்டேதானிருக்கும் என்ற** சிந்தையுடையோர் அநேகர். அப்படிப்பட்டோர், ஆசீர்வாதங்கள் தங்களை விட்டு அகன்று செல்லும்போது, கர்த்தர் தங்களைக் கைவிட்டுவிட்டார் என்ற பேதமைக்குள்ளும் தங்களைத் தள்ளிவிடுகின்றனர். அவர் நம்மை நெருங்கிவரும்போதோ அல்லது நாம் அவரை நெருங்கிச் செல்லும்போதோ நம்முடைய வாழ்க்கையில் நிகழ்வது என்ன? என்பதை அறிந்துகொண்டால் மாத்திரமே, முறுமுறுக்காத மனதுடன் கிறிஸ்துவின் அன்பில் இறுக்கமாக வாழ இயலும்.

பன்னிரண்டு வருஷமாய் பெரும்பாடுள்ளவளாயிருந்து, தன் ஆஸ்திகளையெல்லாம் வைத்தியர்களுக்குச் செலவழித்தும், ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்த ஒரு ஸ்திரீ, இயேசுவுக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டபோது அவள் சுகமடைந்தாள் (லூக். 8:44); இது, ஓர் சுகமான சுவிசேஷம்; ஆம், ஆண்டவருக்கு அருகில் வந்ததால் **வியாதி அவளை விட்டுப் போனது**; இயேசுவைத் தொடும்போது **பெரும்பாடு வியாதி அந்த ஸ்திரீயை விட்டு நீங்கியதைப் போல, அவரைத் தொடும்போது பெரும் பாடு பட்டு சம்பாதித்து சேர்த்துவைத்தவைகளும் நம்மை விட்டு விலகுவதற்கு நாம் இடங்கொடுக்கவேண்டும்**. சுமைகளை விட்டுக்கொடுத்தால் மாத்திரமே, அவரோடு பயணிப்பது சுலபமாயிருக்கம். **விட்டுவிடு என்று சொல்லுபவைகளை**

**வைத்துக்கொண்டே வாழ முயற்சிப்பதுதான் அநேகருடைய வாழ்வின் பெரும்பாடுள்ள நிலைக்குக் காரணம்.** "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று ஜனங்கள் யோவானிடத்தில் கேட்டபோது, அவர்களுக்கு அவன் பிரதியுத்தரமாக: இரண்டு அங்கிகளையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரத்தை உடையவனும் அப்படியே செய்யக்கடவன் (லூக் 3:10,11) என்று விட்டுவிடவேண்டியவைகளைக் கற்றுக்கொடுத்தானே. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு (மத் 5:40) என்று இயேசுவும் போதித்தாரே. நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின்பற்றிவா என்று இயேசு சொன்னபோது, அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான் (மத் 19:21, 22); இயேசுவைத் தொடருவதையோ விட்டுவிட்டான்.

லூக்கா தனது சுவிசேஷத்தில் குறிப்பிடுகிற தொடர் நிகழ்வுகளாகிய இரண்டு சம்பவங்களும், நமக்கு ஓர் சத்தியத்தை உணர்ந்தவே சங்கிலித் தொடராக தொக்கிவருகின்றது. முதலாவதாக, கெனேசரேத்துக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த பேதுருவின் படகில் இயேசு ஏறி, ஜனங்களுக்குப் போதகம்பண்ணி, மிகுதியான மீன்களை பேதுருவுக்குக் கொடுத்த பின்பு, **"இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்"** (லூக். 5:10) என்றார். உடனே, அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, **எல்லாவற்றையும் விட்டு,** அவருக்குப் பின்சென்றார்கள் (லூக் 5:11). **ஆசீர்வாதங்களைப் பெற்ற பின்பு, மனுஷரைப் பிடிக்க நாம் மறந்துபோவோமென்றால்,** ஆசீர்வாத்தை வைத்துக்கொண்டு, இயேசுவையோ தவறவிட்டுவிடுவோம். "நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப்போகவேண்டும்" (லூக். 5:8) என்று பேதுரு இயேசுவை வழியனுப்பிவிட விரும்பியபோதிலும், இயேசு அவனருகே நின்றுகொண்டேயிருந்ததற்குக் காரணம், அவனைப் பிடித்துக்கொள்ளவே. பிரியமானவர்களே, உங்களை ஆசீர்வதித்த இயேசு இன்னும் உங்கள் அருகிலேயே நின்றுகொண்டிருக்கிறார், உங்களுக்கு மேலும் மீன்களை அள்ளிக் கொடுப்பதற்காக அல்ல, ஆசீர்வாதத்திலிருந்து கொஞ்சத்தை நீங்கள் அவருக்கு அள்ளித்தரவேண்டும் என்பதற்காகவும் அல்ல, மாறாக உங்களையே அவரது பணிக்காக அள்ளிக்கொண்டு செல்வதறாக; ஆயத்தமா? ஆசீர்வாதங்களை விட்டுவிட ஆயத்தமா?

தொடர்ந்து வரும் சம்பவத்தில், அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில், குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் இயேசுவைக் கண்டு, முகங்குப்புற விழுந்து: ஆண்டவரே, உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும் என்று அவரை வேண்டிக்கொண்டான். அவர் தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்; உடனே **குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று** (லூக் 5:12,13). இயேசுவை

நெருங்கும்போது, வியாதிகள், கடன் தொல்லைகள், பிரச்சனைகள், பில்லிசூனியங்கள், சத்துருவின் இதர போராட்டங்கள் அனைத்தும் விட்டு நீங்கிப்போய்விடும்; ஆனால், ஆசீர்வாதமோ அப்படியே இருக்கும் என்ற போதனையோடு தேவனை வேதனைப்படுத்தும் மனநிலையோடு வாழ்கின்ற கூட்டத்தாரா நாம்? அப்படியென்றால் நாம் மனந்திரும்பவேண்டியவர்கள். **பேதுருவுக்கு ஆசீர்வாதம் விட்டுப் போனது, இந்த மனிதனுக்குக் குஷ்டம் விட்டுப் போனது**. இவ்விரு கோணங்களிலும் கிரியை செய்பவராக தேவனைக் காண்போம். **ஆசீர்வாதத்தை நாம் வஞ்சித்து வைத்துக்கொண்டு, பாரங்களை மாத்திரம் அவர் மீது கொட்டிவிட வாஞ்சியாதிருப்போம்**. வைத்துக்கொண்டிருக்கிறவைகளை அவருக்காக விட்டுக்கொடுக்காவிட்டால், ஊசி முனைக்கு முன் ஒட்டகம் நின்றுகொண்டிருப்பதைப் போல நாமும் நின்றுகொண்டிருக்கவேண்டியதுதான். அவரைத் தொட்டால் வியாதிகள் மாத்திரமல்ல, நாம் வைத்திருக்கிறவைகளும் போகும் என்பது இன்று நம் அறிவுக்கு எட்டவேண்டியது.

## வீட்டை விட்ட அநீதி

இயேசுவை காணவேண்டும் என்று காத்திருந்தான் சகேயு, என்றாலும் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தபோது, சந்தோஷமாய் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோனான். சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் **பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்**, நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் **திரும்பச் செலுத்துகிறேன்** என்றான் (லூக் 19:8). இதுவரை நான் திருடினது அப்படியே வீட்டில் இருக்கட்டும், அதை வைத்துக்கொண்டே, இனி திருந்தி வாழலாம் என நினைக்கவில்லை சகேயு. அநியாயமாய் சம்பாதித்ததை அவன் தன்னோடு வைத்துக்கொள்ள விரும்பவில்லை, அப்படி வந்தவைகளை அவர்களிடமே ஒப்படைத்துவிட்டான். அத்துடன், தன்னுடைய ஆஸ்திகளில் பாதியையும் ஏழைகளுக்கு கொடுக்கிறேன் என்று இயேசுவின் போதனைக்கும் கீழ்ப்படிகிறான். "ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" என்று இயேசு கற்றுக்கொடுத்தது போல, "அநியாயமாய் வாங்கியவைகளை வாங்கியோரிடமும், ஏழைகளுக்குரியதை ஏழைகளுக்கும்" செலுத்தி தனது நாணயத்தைக் காத்துக்கொண்டான் சகேயு. எனவே இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே என்றார் (லூக் 19:9).

இயேசு மரணாக்கிகைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்பட்டு, காட்டிக்கொடுத்த காசை கையில் வைத்துக்கொள்ள விரும்பாத யூதாஸ் காரியோத்து, அதை பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்பக் கொண்டுவந்தான். அவர்கள் அதை வாங்க மறுத்தபோது, அதனை வைத்துக்கொள்ள மனதற்றவனாக, தேவாலயத்திலே எறிந்துவிட்டான் (மத். 27:5). என்றாலும், அவன் நான்றுகொண்டு செத்தான். தீதான வழியில் வந்த பணம், உன்னோடு இருந்தால் அது தொடர்ந்து உன்னுடைய வாழ்க்கையில் தீமையையே செய்துகொண்டிருக்கும், அதை வீட்டை விட்டு

வெளியேற்றிவிட்டு வாழக் கற்றுக்கொள்ளுவதே ஞானமானது. தீய வழியில் வந்ததை விட்டுவிடுங்கள், **தேவனுக்கு உரிய பங்கைக் கொடுத்துவிடுங்கள்; அப்போது, உங்களிடத்தில் மீதமாயிருக்கும் பங்கின் ஆசீர்வாதத்தை உண்மையாய் அனுபவிப்பீர்கள்.**

**மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்.** உங்களுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காகப் பழிவாங்குவேன்; சகல ஜீவஜந்துக்களிடத்திலும் மனுஷனிடத்திலும் பழிவாங்குவேன்; மனுஷனுடைய உயிருக்காக அவனவன் சகோதரனிடத்தில் பழிவாங்குவேன் (ஆதி. 9:4,5) என்ற எச்சரிப்பு மணி எப்போதோ அடிக்கப்பட்டு, அதன் ஓசை இன்றும் வேதத்தில் கேட்டுக்கொண்டேயிருக்கின்தல்லவோ. இந்த சத்தியம் வெறும் சாப்பாடோடு கூட மாத்திரமே ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கது அல்ல, சம்பாத்தியத்தோடும், சமையத்தோடும் கூட ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியது. அனைத்தும் தங்களுக்கே என்று நினைப்போர், “மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கிறவர்களே”. அவருக்குக் கொடுக்கப்படவேண்டிய நேரம் கொடுக்கப்படவேண்டும், இல்லையென்றால் அந்த நாளை நாம் “இரத்தத்தோடு புசித்தவர்களாகவே” இரவு படுக்கைக்குள் பிரவேசிக்கவேண்டியது வரும்.

தவறு செய்து தங்கள் ஜீவனையே விட்டுவிட்ட தம்பதியரான அனனியா மற்றும் சப்பீராள் இவ்விருவருடைய வாழ்க்கை மேலும் நம்மை உணர்வடையச் செய்யக்கூடியது. யோசே என்பவன், தனக்கு உண்டாயிருந்த நிலத்தைவிற்று, அதின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான் (அப் 4:37). இதைப் பார்த்துக்கொண்டிருந்த அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் தங்கள் காணியாட்சியை விற்றார்கள். தன் மனைவி அறிய அவன் கிரயத்திலே **ஒரு பங்கை** வஞ்சித்துவைத்து, **ஒரு பங்கைக்** கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான் (அப் 5:1,2). “நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள்?” (அப். 5:8) என்று சப்பீராளிடத்தில் கேட்கப்பட்டதுபோல, “நீ பூமியில் வாழ்ந்துகொண்டிருந்த நாட்களில் நான் உனக்கு எவ்வளவோ கொடுத்தேனே, ஆனால், நீ கர்த்தருக்கென்று கொடுத்தது இவ்வளவுதானா?” என்று நியாயாதிபதி கேட்கும்போது, பதில் சொல்ல பெலனற்றவர்களாக நின்றுகொண்டிருப்போம். மற்றவர்கள் கொடுப்பதைக் காணும்போது, கொடுக்கவேண்டும் என்ற விருப்பம் நமக்குள் உருவாகுவது உண்மையே; என்றாலும், அதற்குள் வஞ்சகம் மறைந்திருக்காதபடி மனதைச் சுத்தமாகக் காத்துக்கொள்ளுவோம். **என் சந்நிதியில் வெறுங்கையாய் வரவேண்டாம்** (யாத் 23:15) என்றார் கர்த்தர். இதன் அர்த்தம் என்ன? நான் உனக்குக் கொடுத்தவைகள் எல்லாவற்றையும் வீட்டில் வைத்துவிட்டு வந்துவிடாதே, அதிலே எனக்குரியதை எடுத்துக்கொண்டு வா என்பதுதானே. **அவர் முழுவதைக் கேட்டாலும் முணங்காமல் கொடுப்பதுதான், முதிர்ச்சியான வாழ்க்கை.**

# இன்றைக்கு என்ன பிரசங்கம்?

## உயர்ந்த மரம் உதிர்ந்த பழம் - 6

ஜார்க்கண்ட் மாநிலத்தின், சந்துவாவில் காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த குடும்பக் கூடுகையில் பிரசங்கிக்க சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார் ஆயத்தமாயிருந்தார். 9.45 மணிக்கு, தங்கியிருந்த அறையிலிருந்து வாகனத்தில் அவர் புறப்பட்டபோது, நானும் உடன் சென்றேன். வாகனம் புறப்பட்டு சற்று தூரம் சென்றதும், “அண்ணன் ஏதாவது குடிக்கிறீங்களா?“ என்று நான் கேட்க, “சூடாக ஏதாவது இருந்தால் போதும்“ என்ற பதில் வந்தது. அதைத் தொடர்ந்து, ‘அண்ணன் இன்றைக்கு என்ன பிரசங்கம்’ என்ற கேள்வியை அவருக்கு முன் வைத்தேன். ‘பரிசுத்தத்தைக் குறித்துப் பேசுவேன்’ என்று சட்டெனப் பதில் கிடைத்தது.

கூட்டம் நடக்கும் இடத்தினை வாகனம் சென்றடைந்தது. சகோதரர் மேடைக்குச் சென்று அமர்ந்தார்; உடன் ஊழியர்களைச் சந்தித்த நான், ‘பரிசுத்தம்’ என்ற தலைப்பில் இன்று பிரசங்கம் என்று சொன்னேன்; நானும் அச்செய்தியைக் கேட்க ஆவலுடன் இருந்தேன். பாடல் மற்றும் ஆராதனை வேளை நிறைவுற்றது, பிரசங்கத்தைத் தொடங்கினார் சகோதரர் அகஸ்டின் ஜெபக்குமார். குடும்ப வாழ்வுக்குத் தேவையான ஆலோசனைகள் பல வேதத்தின் அடிப்படையில் செய்தியாக வெளிவந்துகொண்டிருந்தது. கூடியிருந்த குடும்பத்தினர் செய்திக்குத் தங்களை அர்ப்பணித்தனர்.

எனினும், எனக்கோ குழப்பம், பரிசுத்தத்தைக் குறித்துதானே பேசுவேன் என்று சகோதரர் சொன்னார்; ஆனால், அதை விட்டுவிட்டு, குடும்ப வாழ்வின் அஸ்திபாரங்களைக் குறித்துப் பேசியது ஏன்? என்ற குழப்பத்திலிருந்தேன். சகோதரர் எப்போது பிரசங்கத்தை மாற்றினார் என்று அவரிடமே கேட்டுவிடத் துடித்துக்கொண்டிருந்தேன். கூட்டம் முடிந்ததும் தங்குமிடம் நோக்கிச் சென்ற சகோதரருடன் வாகனத்தில் உடன் சென்ற நான்,

“அண்ணன், பரிசுத்தத்தைக் குறித்துதானே பேசுவேன் என்றீர்கள்....” என நான் வார்த்தைகளை இழுத்தபோது, அவர், ஆம், நான் **காலையில் நினைத்தது அதுதான், ஆனால் மேடையில் நினைத்தது அவர்தான்** என்று பதிலுரைத்தார்.

‘பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்’ (மத் 10:20) என்ற வசனம் அப்போது எனக்குப் பிரசங்கமாயிற்று.



**இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும். (மத் 26:13)**



# பேராயர் வேதநாயகம் சாமுவேல் அசரியா

(1874 - 1944)

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள வெள்ளாளன்விளையைச் சேர்ந்தவர் வேலாயுதம் என்ற தாமஸ் வேதநாயகம், 1839-ம் ஆண்டு இயேசுவை ஏற்றுக்கொண்ட இவர், தனது மகனுக்கு வேதநாயகம் சாமுவேல் அசரியா எனப் பெயரிட்டார். 17.08.1874 அன்று பிறந்தார் பேராயர் அசரியா, 1889-ம் ஆண்டு தனது சிறுவயதிலேயே தந்தையை இழந்ததால், தாயின் பராமரிப்பில் வளர்க்கப்பட்டவர். நல்லதோர் ஜெப வீரனாகவும், வேதத்தை நன்கு கற்றறிந்த வாலிபனாகவும் வளர்ந்து வந்த இவர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் இறையியல் பட்டமும் பெற்றார். பின்னர் "கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் (YMCA) காரியதரிசியாக நியமிக்கப்பட்டார். அந்நாட்களில், மிஷனரியாகப் பணிசெய்துகொண்டிருந்த உவாக்கர் ஐயரது ஊழியத்தினாலும், செய்தியினாலும் தேவனுக்காக ஊழியம் செய்ய அதிகமாக ஊக்குவிக்கப்பட்டார். 1902 -ம் ஆண்டு யாழ்ப்பாணம் சென்றபோது, அங்கு தமிழர்கள் தொடங்கிய மிஷனரி சங்கத்தின்மூலம் நடைபெற்றுவந்த செயல்பாடுகளினால் மிகவும் ஈர்க்கப்பட்டு, இந்தியாவிலும் மிஷனரி சங்கம் ஒன்றைத் தொடங்க முடிவு செய்தார்.

மிஷனரி மாநாடு ஒன்றில் இவர் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது, ஜனங்கள் ஆர்வமுடன் இறைவார்த்தையினைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இறைப்பணியின் தேவையையும், அவசியத்தையும் அனைவரின் உள்ளத்திலும் ஊற்றிக்கொண்டிருந்தார் போதகர் அசரியா. "மிஷனரிப் பணிக்காக அர்ப்பணிப்போர் உங்களில் எத்தனை பேர்?" என்ற அறைகூவலை அவர் விடுத்தபோது, கூட்டத்திலிருந்து எழுந்து வந்த வாலிபன் ஒருவன் போதகர் அசரியாவை நோக்கி, **"நீங்களே ஏன் ஒரு மிஷனரியாகச் செல்லக்கூடாது?"** என்ற கேள்வியை முன்வைத்தான். வாலிபனின் கேள்வியால் உள்ளம் உடைந்த அசரியா மிஷனரிப் பணிக்காக அன்றே தன்னை ஒப்புக்கொடுத்தார். 1903 -ம் ஆண்டு சில நண்பர்களுடன் இணைந்து திருநெல்வேலி இந்திய மிஷனரி சங்கத்தைத் தொடங்கினார் (IMS).

போதகர் அசரியாவின் ஊழியத்தில் காணப்பட்ட நேர்மை, உண்மை, தைரியத்தைக் கண்ட சென்னை பேராயர் ஒயிட் ஹெட், தோர்ணக்கல்லில் மிஷனரியாகச் செல்வதற்கு முன் உதவியும் மற்றும் போதகர் அபிஷேகம் கொடுத்து அனுப்பினார். YMCA வின் பணிகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, தோர்ணக்கல் பணித்தளத்தில் தனது பணியினைத் தொடர்ந்தார் போதகர் அசரியா. ஆறு மாதத்திற்குள் அசரியாவுக்கு குரு பட்டம் கொடுக்கப்பட்டது. சில ஆண்டுகளில் பல தடைகளையும் தாண்டி, கல்கத்தா செயிண்ட் பவுல் தேவாலயத்தில் பேராயராக அசரியாவை அபிஷேகம் செய்து வைத்தார் பேராயர் ஒயிட்ஹெட். தோர்ணக்கல்லின் பேராயராகவும், சென்னை பேராயத்தின் உதவி பேராயராகவும் திறம்பட செயல்பட்டார் பேராயர் அசரியா.

தோர்ணக்கல்லின் மிஷனரி பிஷப்பாக சில வருடங்களில் அநேக ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் நடத்தினார். 1944 -ம் ஆண்டு 2,40,000 ஆத்துமாக்களையும், 2152 தென்னிந்தியத் திருச்சபைகளையும், இந்திய குருமார் 167 மற்றும் சபை ஊழியர்கள் 1874 ஆக கொண்டதாக தோர்ணக்கல்லில் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயம் வளர்ந்து நின்றது. பிஷப் அசரியா அவர்களினால் தோர்ணக்கல்லில் கட்டப்பட்ட திருச்சபையானது முற்றிலும் இந்தியர்களின் பணத்தினால், இந்திய பாரம்பரிய கட்டடங்களின் வடிவில் கட்டப்பட்டு இன்று வரை அதன் பொழிவு மாறாமல் உள்ளது. பிஷப் அசரியா கட்டின ஆலயத்தில் அப்போது தரையில் தான் அமரவேணடும். தெலுங்கு மொழியினை தான் கற்றுக்கொண்டதுடன், கீர்த்தனைகள், மற்றும் ஆராதனை முறைமைகளில் சில மாற்றங்களை தெலுங்கில் செய்து பின்பற்ற உதவினார்.

தென்னிந்தியத் திருச்சபை உருவாவதற்க்கு வித்திட்டவர் பேராயர் அசரியா அவர்களே. 1944 -ம் ஆண்டு டிசம்பர் 31 அன்று மிஷனரியாக தன்னை அர்ப்பணித்து, அத்துடன் முதல் இந்திய பேராயராகவும் சிறப்பாக தேவ ஊழியம் செய்த பேராயர் அசரியா ஜனவரி 1, 1945 - ல் கர்த்தருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தார்.

“இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்” (ஏசா 6:8) என்று அர்ப்பணித்த பிஷப் அசரியாவின் வரிசையில் அடுத்ததாக நின்றுகொண்டிருக்கிறோம் நாம்.



**தோர்ணக்கல்லில் பேராயர் அசரியாவால் கட்டப்பட்ட ஆலயம்**



வாலிபர் பகுதி

**செல்வக்குமார்**

# சோர்ந்துபோகாதே

வணக்கம் வாலிபர்களே! வளர்ந்து கொண்டிருக்கும் நவீன உலகில், தேவனண்டையில் கிட்டிச் சேரவிடாமல் நம்மைத் தடுக்கின்ற சத்துருவின் மறைமுக தக்குதல், உலக காரியங்களினால் நம்மை சோர்வாக்கிவிடுவதுதான். ஆவிக்குறிய வாழ்க்கையின் வளமையை வறட்சியாக்க சத்துரு நமக்குள் தர நினைப்பதும் இந்த சோர்வுதான். ஆனால், தீமையை நன்மையாய் முடியப்பண்ணுகிற தேவன், எரிகோ விழுந்தபோது இஸ்ரவேல் ஜனங்கள் அதை மிதித்து நடந்தது போல சோர்வு என்னும் தடைகற்களை நமக்கு முன்பாக படிக்கட்டுகளாக மாற்றி வாலிபத்தில் முன்னேறிச் செலல் உதவிசெய்வார்.

நினிவே பட்டணத்திற்காக தேவன் மனஸ்தாபப்பட்டு இரங்கினதைக் கண்டு யோனா எரிச்சலடைந்து, கடுங்கோபங்கொண்டான். தேவன் செய்கின்ற காரியங்களைப் புரியாதவனாக, ஆமணக்குச் செடியின் கீழ் இருந்த யோனாவுக்கு பாடம் கற்றுக்கொடுப்பதற்காக தேவன் சோர்வை அனுமதிக்கிறார். சூரியன் உதித்தபோது தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்துபோனான் (யோனா-4:8). ஆமணக்குச் செடி முளைத்தபோது சந்தோஷப்பட்ட அவன் அது அழிந்தபோதோ அதற்காய் பரிதபித்தவனாய் சோர்ந்துபோகிறான். நமது ஆவிக்குறிய வாழ்வின் தரம் தவறும்போதும், திடமாய் பிடித்திருக்கும் தவறான தீர்மானத்தின்போதும் சரியாய் வழிநடத்தப்படுகிறதற்காய், கற்றுக்கொள்கிறதற்காய் மட்டும் நமது வாழ்க்கையிலே சில சோர்வுகளை தேவன் அனுமதிக்கிறார். மோசேக்கு தேவன் அநேகக் காரியங்களைக் கற்றுக்கொடுத்ததற்குக் காரணம், அவனை உயர்த்தவும், அவன் மூலம் தம்முடை பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவே. தேவன் இவ்வளவு பெரிய பாக்கியத்தை வைத்திருப்பாரானால் சோர்வினால் கற்றுக்கொள்வது நமக்கு ஆசீர்வாதம்தானே. சோர்வின் அனுபவம் கசப்பாய் இருந்தாலும், பொறுமையோடு காத்திருப்பதாலும், கற்றுக்கொள்வதாலும் யோபுவைப்போல் நாமும் ஆசிர்வதிக்கப்படமுடியும் என்று எண்ணினவர்களாய் தொடர்ந்து தேவனையே சார்ந்துகொண்டு ஜெயம் பெறுவோம்.

ஆவிக்குரிய வழ்க்கையில் சில நேரங்களில் ஒருவித வெறுமையை நாம் உணரக்கூடும். இந்த வெறுமை நம் வெளியுலக வாழ்க்கைவரை அதன் பாதிப்பை வெளிக்காட்டலாம். தேவன் தம்மை உண்மையாய் தேடுகிறவர்களின் வாழ்க்கையில் வெறுமைக்கும், சோர்வுக்கும் இடங்கொடாமல் வளமாக்கிடுவார். இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து: ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன், இவர்கள் என்னிடத்தில்

மூன்றுநாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்துபோவார்களே என்றார் (மத்-15:32). மூன்று நாட்களாய் இயேசுவிடம் தரித்தவர்களாய் அவரின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஜனத்திற்காக இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி அவர்களுக்காக அற்புதம் செய்து பெலத்தொடும் உற்சாகத்தோடும் அனுப்பி வைத்தார். இந்த ஜனத்தைப்போன்று தேவனண்டையில் கிட்டிச்சேர்கின்றவர்களாகவும், தேவனுக்காய் அதிக நேரங்களை செலவிடுகிறவர்க-ளாகவும், தேவனுடைய காரியங்களை முதன்மைப்படுத்துகிறவர்களாகவும் நாம் காணப்படலாம், தடைகளைத்தாண்டி தேவனை பிடித்துக்கொள்ளும் அனுபவம் நம் வாழ்க்கையின் அங்கமாக இருக்கலாம். என்றாலும், உலகத்துக்குள் நாம் கடந்துபோகும்போது சோர்வினால் நம் காலங்கள் கடப்பதற்கு இயேசுவின் மனம் ஒருபோதும் விரும்புவதில்லை. மாறாக நம்மை சோர்வடையச் செய்யும்படி நமக்கெதிராய் வருகின்ற பிரச்சனைகள் தோன்றுவதற்கு முன்னமே தேவன் நம்மை பெலப்படுத்த வல்லவர். தேவன் தம்மண்டை சேருகிறவர்களை வெறுமையாய் அனுப்பாமல் ஜெயங்கொள்ளும் பெலத்தொடு அனுப்புகிறவர். எனவே சோர்வு நம்மைத் தொடாமலிருக்க இன்னும் தேவனைக் கிட்டிச்சேர்வதற்கும், தேடுவதற்கும் முன்னேறிடுவோம்.

சோர்வு அநேகரை கலங்கவைத்தாலும், **தேவபிள்ளைகள் கற்றுக்கொள்ளவும் மற்றும் பெலப்படவுமே தேவன் அதை அனுமதிக்கின்றார்**. ஆனால், சத்துருவுக்கோ சோர்வின் கலக்கத்தை முழுமையாய் அனுபவிக்கும்படி வைத்திருக்கிறார். வளமான எதிர்காலத்தை எதிர்நோக்கும் வாலிபர்களே, நீங்கள் தேவனுடைய காரியங்களை முக்கியத்துவப்படுத்தி தேவனண்டை கிட்டிச் சேர்கிறவர்களாக இருப்பீர்களென்றால், வாழ்க்கையின் சோர்வைக் குறித்தும், எதிராய் நிற்கும் சத்துருவைக்குறித்தும் சிறிதளவும் கலங்கத் தேவையில்லை. நமக்கெதிராகப் போராடுகின்ற காரியங்கள் அனைத்தையும் தேவபிள்ளைகளுக்கு முன்பாக தேவன் சோர்ந்துபோகப்பண்ணுகிறார். தேவப்பிள்ளைகளை குறித்த கலக்கமும் சோர்வும் அவர்களை பிடித்துக்கொள்ளும். அவர்கள் இருதயம் கரைந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகச் சோர்ந்துபோனார்கள் (யோசு-5:1) என்று வாசிக்கின்றோமே. தம் ஜனமாகிய இஸ்ரவேலர்களின் இருதயம் சோர்ந்துவிடக்கூடாது என்பதற்காக தேவன் யோர்தானை வற்றிப்போகப்பண்ணி அதை கடந்துபோகப்பண்ணுகிறார். ஆனால் சுற்றியிருக்கின்ற ஜனங்களோ, தேவ ஜனமான இஸ்ரவேலைப் பார்த்து சோர்ந்து போகிறார்கள். அப்படியானால் இஸ்ரவேல் ஜனங்களை எதிர்ப்பதைக் குறித்து நினைத்துக்கூட பார்த்திருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட பிரதான ஆசீர்வாதத்தை தம்மை உண்மையாய்த் தேடுகிற தேவபிள்ளைகளுக்கு வைத்திருக்கிறார்.

உள்ளத்திலும் உடலிலும் புது உற்சாகத்தோடிருக்கும் வாலிபர்களே, உங்களது வாழ்கையில் எதிர்காலத்திற்கு எதிராக சத்துரு கொண்டுவரும் சோர்வின் காரியங்களைக்குறித்து கலங்கமல் தேவபிள்ளைகளாய் வாழ்வதற்கு அர்பணியுங்கள். இன்னும் ஆவிக்குறிய வாழ்வில் வளருவதற்கு தடைகளைத் தகர்த்து முன்னேறிடுங்கள். தேவன் உங்கள் வாழ்கையிலும், உங்களைக் கொண்டும் பிற ஜனங்களுடைய வாழ்க்கையிலும் பெரிய காரியங்களைச் செய்திடுவார். தேவ பெலத்தோடு தொடருங்கள்.

## தேவதூதர்கள் - (மத்தேயு 4:11)

இயேசுவின் வாழ்வில் தேவதூதர்கள் பெருமளவு இடம் பெற்றுள்ளனர்.

- ☐ தேவதூதன் இயேசுவின் பிறப்பை மரியாளிடம் முன்னுரைத்தான். (லூக் 1:26-37)
- ☐ தேவதூதன் இயேசுவின் பிறப்பை யோசேப்பிடம் முன்னுரைத்து, குழந்தைக்கான பெயரையும் கூறினான். (மத் 1:20,21)
- ☐ தேவதூதர்கள் இயேசுவின் பிறப்பை மேய்ப்பர்களிடம் அறிவித்தார்கள். (லூக் 2:8-15)
- ☐ தேவதூதன் குழந்தையைக் காப்பாற்ற எகிப்திற்கு தப்பியோட வழிகாட்டுதல். (மத் 2:13,20)
- ☐ நாற்பது நாள் சோதனையின் முடிவில், தேவதூதர்கள் இயேசுவிற்கு பணிவிடை செய்தார்கள். (மத் 4:11)
- ☐ கெத்சமனேயில் தேவதூதன் இயேசுவை பலப்படுத்தினான். (லூக் 22:43)
- ☐ தேவதூதன் இயேசுவின் கல்லறை வாசலிலிருந்த கல்லை புரட்டித் தள்ளினான். (மத் 28:2)
- ☐ இயேசுவின் உயிர்த்தெழுதலை பெண்களுக்கு தேவதூதன் அறிவித்தான். (மத் 28:5-7)
- ☐ இயேசுவின் கல்லறையில் தேவதூதர்கள் மகதலேனா மரியாளுக்கு காட்சியளித்தனர். (யோவா 20:11-14)

### தேவதூதர்களை குறித்து இயேசு கூறிய மேற்கோள்கள்

- ☐ தேவதூதர்கள் மனுஷகுமாரனித்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் காண்பீர்கள். (யோவா 1:51)
- ☐ 12 லேகியோனுக்கு அதிகமாக தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? (மத் 26:53)
- ☐ மனுஷகுமாரன் மகிமை பொருந்தினவராய் திரும்பி வருகையில் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வருவார். (மத் 25:31; 16:27; மாற் 8:38; லூக் 9:26)
- ☐ உலகத்தின் முடிவிலே அறுப்பை அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். (மத் 13:39)
- ☐ மனுஷகுமாரானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை தேவதூதர்கள் கூட்டிச் சேர்ப்பார்கள். (மத் 24:31)
- ☐ உலகத்தின் முடிவில் தேவதூதர்கள் நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து அக்கினிச் சூளையிலே போடுவார்கள். (மத். 13:41,49)
- ☐ தேவதூதர்கள் தரித்திரனை ஆபிரகாமின் மடியிலே கொண்டு போய் விட்டார்கள். (லூக் 16:22)
- ☐ மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கது முன்பாக சந்தோஷமுண்டாயிருக்கிறது. (லூக் 15:10)

☐ சிறுவர்களின் பாதுகாவலராய் தேவதூதர்கள் செயல்படுகின்றனர். (மத் 18:10)

☐ மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கை பண்ணுவார். (லூக் 12:8)

☐ தேவதூதர்கள் பெண் கொள்வதுமில்லை, மரிப்பதும் இல்லை. (லூக் 20:35,36; மத் 22:30)

☐ பிசாசிடம் தீய தேவதூதர்கள் இருக்கிறார்கள் (மத் 25:41)

## அறிவிலிருந்து வந்த அழிவு

"உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" (ஏசாயா 14:14) என்று நினைத்தவன் கீழே தள்ளப்பட்டான். "செயற்கை முட்டை, செயற்கை அரிசி, கலப்பினக் கன்றுகள், வீரிய விதைகள் என்று ஏதேதோ கண்டுபிடித்து, அவரது அறிவினால் செய்யப்பட்ட உயிர் வகைளுக்குள் தனது அறிவினை நுழைத்தால், அது ஆபத்தைத்தான் விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. நம்முடைய மூதாதையர் சுவைத்து உண்ட ரகங்களில் பலவற்றில் நாம் கைவைத்து அவைகளின் பெயர்தனையே காலி செய்துவிட்டோம். சுரைக்காய் வடிவில் கத்தரிக்காய் வந்தாலும், தராசில் விற்க அழகாய் இருந்தாலும், இறைவன் படைத்த தாதுக்கள் இல்லையே. இந்த அறிவினால் அழிந்துபோன இயற்கையைக் குறித்து இறைவன் தொடுக்கும் வழக்கிற்கு மனிதனே பதில் சொல்லவேண்டும். ஊசியைப் போட்டு வளர்க்கப்படும் கறிக்கோழிகள், மனிதனையும் ஊசியைப் போட்டுக்கொள்ளவே அனுப்பிவைக்கின்றன. அணுவைப் பற்றிய அறிவு உண்டு, என்றாலும் அதற்குள்ளும் அழிவு உண்டுபண்ணிவிட்டோம்.

இந்த வரிசையில், முழுவதும் மனிதர்களைப் போன்றே செயல்படும் இயந்திர ரோபோக்களையும் உருவாக்கிவிட தீரா முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது விஞ்ஞானம். இன்னும் 20 ஆண்டுகளில், மனிதர்களுள் மனிதனாக ரோபோக்களை உலாவவிடவும், மனிதர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும், மனிதர்களைப் போல வேலை செய்யவும் தக்கதாக வடிவமைக்கப்பட்டு, முதற்கட்டச் சோதனைக்கு முன்நிறுத்தப்பட்டது "சோபியா" என்று பெயர் சூட்டப்பட்ட ஓர் மனித ரோபோ. 'Hanson Robotics" என்ற நிறுவனம் தயாரித்த இந்த ரோபோவின் நேர்க்காணலில், அங்கும் இங்கும் உருண்டுகொண்டிருந்த அதன் விழிகளைக் கண்டும், சுருங்கி நெளிந்துகொண்டிருந்த இமைகளைக் கண்டும், பேச்சுக்கேற்ப மாறும் முகபாவனைகளைக் கண்டும், கேட்கப்படும் கேள்விகளுக்கு மனிதனைப் போலவே அது பதிலளித்துக்கொண்டிருந்தபோது, 'Do you want to destroy humans? Please say no" என்று சொல்லப்பட்டபோது, **'Ok, I will destroy humans'** (சரி, நான் மனிதர்களை அழித்துவிடுவேன்) என்று அது பதிலளித்தது, பேட்டி அத்தோடு முடிந்தது. Sophia என்பது ISIS என்ற எகிப்திய தெய்வத்தின் பெயர் என்பது குறிப்பிடத்தக்கது. யோவேல் தீர்க்கதரிசியின் வார்த்தைகளையே (யோவேல் 2:1-9) இந்தக் கண்டுபிடிப்புகள் நமக்கு நினைகுவூட்டுகின்றன. உயிர்களைப் படைப்பதில் மனிதனுக்குப் பங்கில்லை.




**அவர் மண்ணால் முடித்தது, மனிதனால் முடியாதது**



# The Gardener's Pride

Adelin Andrew

A beautiful garden with a canopy of trees filled with the fragrance of bright, colorful flowers and rich with fruits ripe and ready, would be a feast to the eyes. The breeze and the cool atmosphere inside the garden would soothe a weary mind. Such is the nature of a lively gorgeous garden. To grow such a beautiful garden, the gardener puts in a lot of effort by watering the plants, planting in a fertile soil, manuring the soil, fencing the garden to keep it away from animals, treating the diseased plants and much more. It is a gardener's pride to maintain a well groomed garden.

Just as the gardener takes pride and pleasure of his garden, so does God when we bring before him a sinless, pure, holy and a blameless soul .We read in Proverbs 11:20," Those who are of a perverse heart are an abomination to the Lord. But the blameless in their ways are His delight".

Our body that was formed from the dust of the earth, returns back to the dust. (Genesis 3:19 "For dust you are, And to dust you shall return.") But the soul is us carries life even after the flesh is dead. That is why Jesus himself said in John 3:16 "For God so loved the world that He gave his only begotten son, that whoever believes in him should not perish but have everlasting life". Though the flesh perishes, the soul attains everlasting life through Christ.

God, like a sincere and committed gardener waters, plants and protects our soul, which he expects to grow forth as a beautiful garden. (John 15:1 says," I am the true vine and my Father is the vinedresser"), But Satan, through his cunning plots always tries to lay a trap of our souls and destroy the beautifully tended garden of our souls. ( John 10:10," The thief does not come except to steal and to kill and to destroy"). It is very important for us to realize that the beautiful garden of our soul has to be protected from the evil one. Jesus himself set an example of how he stood against the evil one and his plots to tempt Jesus. (Mathew 4:1-25). Jesus won Satan by strongly adhering to the word of god and believing in God's power in him. (Matthew 4:1-25 "Even when temptations of this world try to destroy our soul, we can win over the devil through the word of God and power of the Holy Spirit".)

Even today, as we live in a corrupted and deceived world, filled with thorns and thistles, would we be able to present ourselves before God as a beautiful garden without blemishes? Are our souls pure, blameless and holy enough to bring pride and joy to the gardener. Let us take some time and evaluate ourselves. Let our garden be our gardener's pride.

Download

online @ www.youthline.in

# இறுதி நாளும் இரண்டு சொல்லும்



நம்மைச் சுற்றி நடக்கும் காரியங்களைக் கண்டு நாம் சும்மா இருந்துவிடலாகாது, சத்தியத்துடன் அதைச் சம்மந்தப்படுத்திப் பார்த்தால், சமையம் நெருங்கிவிட்டது என்ற சத்தம் அவைகளில் ஒலிப்பதையும், இது கடைசிக்காலம் என்பது அந்த ஒலிக்குள் ஒளிந்திருப்பதையும் ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாம் அறிந்துகொள்ளவேண்டுமே.

‘**ஆதார்**’ என்றால் இன்று அறியாதோர் எவருமில்லை. ‘ஆதார்’ என்றால் ஓர் மனிதனைக் குறித்த ஆதாரம் என்றே நாம் சொல்லிக்கொண்டாலும், ‘ஆதார்’ என்ற சொல்லின் அடுத்த பக்கமும் நம் அறிவுக்கு அவசியம். ஆபீப் என்னும் மாதத்தில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தன் ஜனத்தை விடுதலையாக்கிக் கொண்டுவந்தார் கர்த்தர். இதனை, தலைமுறை தலைமுறையாக நினைவுகூறும் வண்ணம், அதனையே வருடத்தின் முதல் மாதமாகவும் குறித்தார்; அதுவே புதுவருடம், ‘ஆண்டவரின் ஆணைப்படி, எகிப்திலிருந்து (பாவத்திலிருந்து) விடுதலையாகாதவர்களுக்கு புதுவருடக் கொண்டாட்டத்தில் பங்கு இல்லை என்பது அதன் உள்ளர்த்தம்” ஆபீப் மாதத்தைத் தொடர்ந்தே பிற மாதங்கள் கணக்கிடப்பட்டன. எனினும், இஸ்ரவேல் மக்கள் பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டுபோகப்பட்டபோது, அவர்களின் வாழ்க்கை முறை பாபிலோனியர்களால் பன்முனைகளில் தாக்கப்பட்டது அஸ்திபாரங்கள் தகர்க்கப்பட்டது. கலாச்சாரம், கல்வி, மொழி, பணி, உறவு, உணவு என அநேக பாபிலோனிய விஷயங்கள் கொஞ்சம் கொஞ்சமாக விஷமாக ஏற்றப்பட்டதுடன், பாபிலோனிய தெய்வங்களையும் வணங்கும்படி வழிநடத்தப்பட்டனர். தானியேலைப் போன்ற சிலர் தங்களைக் தற்காத்துக்கொண்டபோதிலும், தடுக்கிவிழுந்தவர்களின் கூட்டமோ திரளாயிருந்தது. இஸ்ரவேல் மக்கள் ஆசரித்துவந்த ‘ஆபீப்’ மாதத்தின் பெயரை ‘நிசான்’ எனப் பெயர் மாற்றினர் பாபிலோனியர்கள், அத்துடன் பன்னிரெண்டு மாதங்களுக்கும் பாபிலோனியப் பெயர்சூட்டினர்; வருடத்தின் கடைசி மாதத்தின் பெயர் ‘ஆதார்’ என்று சூட்டப்பட்டது.

‘ஆதார்’ என்ற சொல் ஒவ்வொரு மனிதனின் காதிலும் இந்நாட்களில் விழுந்துகொண்டிருக்கின்றதே. பாபிலோனின் கடைசி மாதச் சத்தம் இன்று நமது காதில் தொனித்துக்கொண்டிருக்கிறதே; அப்படியிருக்க, நோவாவின் காலத்தில் காணப்பட்டவர்களைப் போல அஜாக்கிரதையாய் வாழுவது நியாயமாகுமோ? ‘கொஞ்ச காலம் மட்டுமே உண்டு என்கிற அறிவு பிசாசுக்கு உண்டு’ (வெளி. 12:12), தனது நாட்காட்டியின் கடைசி மாதத்தை அவன் உச்சரித்துக்கொண்டிருப்பது, எச்சரிக்கவும், ஆண்டவரின் இரண்டாம் வருகையை எதிர்பார்க்க நம்மை ஆயத்தமாக்கவுமே.

ISIS - என்பது உலகையே பயமுறுத்திக்கொண்டிருக்கும் ஓர் சொல், வலிமை மிக்க நாடுகளுக்கும் தலைவலியாக இருக்கும் இத்தீவிரவாத இயக்கத்தினால் தீவிரமாக உயிர்கள் குடிக்கப்படுகின்றன; என்றாலும், இந்த சொல்லின் மறுபக்கம் ஓர் மறைவான செய்தியையே சொல்கிறது. ISIS என்பது பண்டைய எகிப்தியர்கள் வணங்கிவந்த ஓர் தேவதையின் பெயர்; தலையில் மாட்டுக் கொம்புடனும், அதற்கிடையே சூரிய உருவத்துடனும், வல்லூருவின் வடிவத்திலும் சித்தரிக்கப்பட்டுவந்த இந்த தேவதை, அடிமைகளுக்கும், பாவிகளுக்கும் தோழியாகவும், தாயாகவும் வணங்கப்பட்டுவந்ததுடன், ஆடவர்களின் மனைவியாகவும், பாலுறவின் தேவதையாகவும் வணங்கப்பட்டுவந்தது. அத்துடன், HORUS என்ற தெய்வத்தின் தாயாகவும் எகிப்தியரால் கருதப்பட்டது. HORUS என்றால் சிங்காசனம் என்றும், எகிப்திய சிங்காசனத்தில் அமரும் பார்வோன் யாராயிருந்தாலும், அவன் ISIS தேவதையின் மகன் என்றும் எகிப்தியர்களால் சித்தரிக்கப்பட்டுவந்தது. ISIS தேவதையின் மகனாக தன்னை அடையாளப்படுத்திக்கொண்டால் மாத்திரமே பார்வோனாக எகிப்தில் அவன் ஆட்சி செய்ய முடியும். ISIS மற்றும் HORUS ஆகிய இவ்விரு தெய்வங்களும் தாயும், சேயுமாக சித்தரிக்கப்பட்டும், சிலைகளாக வடிக்கப்பட்டும் எகிப்து தேசமெங்கிலும் மக்களால் வணங்கப்பட்டும் வந்தன.

ரோம அரசர்களின் சாம்ராஜ்யத்தின்போது, கிரேக்கர் மற்றும் ரோமர் கலாச்சாரங்கள் கலந்த நாட்களில் இதன் வணக்கம் பாபிலோனிலும் பரவலாக ஊடுருவியது. பாபிலோனியர்களும் தெய்வமாக இதனை வழிபட்டுவந்தனர். பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுசெல்லப்பட்டிருந்த தேவனுடைய ஜனங்களிலும் சிலர் காலப்போக்கில் இத்தேவதையினை வழிபடத் தொடங்கினர். ISIS என்ற வார்த்தையினை உலகம் அதிகம் உச்சரிப்பது, எகிப்தின் ஆதிக்கம் மீண்டும் தேவஜனத்தை நோக்கித் திரும்புவதைச் சுட்டிக்காட்டவே. "ஆண்பிள்ளைகளானால் கொன்றுபோடுங்கள்" என்று என்று அன்று எகிப்தில் ஆணைபிறந்தது போலவே, இன்றும் ISIS இயத்தினால் ஆண்டவரின் பிள்ளைகள் கொன்றுபோடப்பட்டு, பெண்கள் சீரழிக்கப்படுகின்றார்களே. ISIS என்ற சொல்லின் சத்தம் ISIS தேவதை செய்யும் இக்கடைசிகால யுத்தத்தையே நமக்கு முன்நிறுத்துகிறது. உலகில் பிரபலங்கள் பலர் ISIS என்பதை தங்கள் பெயராக சூட்டிக்கொள்வதும், இந்தியா உட்பட பல்வேறு தேசங்களில் இத்தேவதையின் கணவனாகக் கருதப்படும் பாகால் வணக்கத்திற்காகக் கூம்பு வடிவ கோபுரங்கள் கட்டப்பட்டிருப்பதும், நியூயார்க் மற்றும் லண்டன் போன்ற இடங்களில் இத்தெய்வங்களுக்குக் கோவில்கள் கட்டப்பட ஆயத்தப் பணிகள் நடைபெற்றுவருவதும் இறுதிகால எச்சரிப்பின் செய்தியே. **அஸ்தரோத், சிம்ராமிஸ், இஸ்தார், ஈஸ்டர்** (Easter) போன்ற பிற பெயர்களுடனும் இத்தேவதை அழைக்கப்படுகிறது. முழு உலகையும் தன்பக்கமாக வளைக்க நினைக்கும் இவ்விரு சொற்களும், உலகின் இறுதியையே சொல்லி எச்சரிக்கிறது என்பதே உண்மையான செய்தி.


ISIS with HORUS

# செய்திகள்

- தமிழக சட்டமன்றத் தேர்தல் மே 16 அன்று நடைபெறவிருப்பதை முன்னிட்டு, தேர்தலில் வாக்காளர்கள் 100 சதவீத வாக்கினைப் பதிவுசெய்யவேண்டும் என்பதை வலியுறுத்தும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்றுவருகின்றன. தூத்துக்குடியில் கடற்கரையில் மக்களைக் கவரும் வண்ணம் வரைந்துவைக்கப்பட்டிருக்கும் மணல் ஓவியம் அங்கு வரும் மக்களை வெகுவாக கவர்ந்தது.




- இந்த ஆண்டு முதல் இணையதளம் மூலமாக மட்டுமே பொறியியல் படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்படும், ஏப்ரல் 15 முதல் விண்ணப்பங்களை பதிவு செய்யலாம் என்று அண்ணா பல்கழைக்கழகம் அறிவித்துள்ளது.
- பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸ் குண்டு வெடிப்பில் சென்னையைச் சேர்ந்த இஞ்ஜினியர் ராகவேந்திரன் பலியானார். அவரது உடல் விமானம் மூலம் சென்னை கொண்டுவரப்பட்டது.
- ISIS படைகள் கைப்பற்றியிருந்த பழங்கால சின்னங்களைக் கொண்ட பல்மைரா நகரத்தை சீரிய ராணுவம் மீட்டது. கல்லறைக்கு அடியில் கூட நவரத்தினங்களும், பொன்னும், வெள்ளியும் இருக்கும் என்ற ஆசையில் அந்நகரத்தைப் பெயர்த்து அலங்கோலமாக்கியிருந்தனர் தீவிரவாதிகள். தீவிரவாதிகளின் குண்டுவெடிப்பில் பாகாலின் கோவில் தரைமட்டமானது. இந்தக் கோவில், முன்னொரு காலத்தில் தேவாலயமாக மாற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.




messages available at
www.youthline.in
to send your Address, Subscriptions and Support
Visit our website

அழைப்பு
அர்ப்பணிப்பு

**SINEGITHAN**

7/273, Mettu Street, Senthiambalam, Sawyerpuram Post,
Thoothukudi Dist., TamilNadu, South India. Pin. : 628 251,
Mobile : +919994303363
E-mail : sinegithanoffice@gmail.com, Facebook : youthline

To

..............................................................

..............................................................

..............................................................

..............................................................

Owned and published by Mr. Jeyasundar Kirubagaran, 7/273, Mettu Street, Senthiambalam, Sawyerpuram Post, Thoothukudi Dist., TamilNadu - 628251 and printed by Mr.Jude Antony Arulraj at Arul Printers, 268A/32, WGC Road, Flower Plaza, Thoothukudi - 628002, TamilNadu.
Editor Mr. Jeyasundar Kirubagaran